(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **28**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 ஆகஸ்ட் 10, வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரியெல்ல,** அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனாநாயக்க,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ புத்திக பத்திறண,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,** தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** கமத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ முத்து சிவலிங்கம்,** சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ அநுராத ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ தயாசிறி ஜயசேகர**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ தருமலிங்கம் சித்தார்த்தன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. நீல் இத்தவல, பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள் :** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— “2015 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் தெரிவாகிய எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களைக் கொண்டதாக, எதிர்த்தரப்பில் உள்ள மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 93 எனவும் இதில் 70 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தினேஷ் குணவர்தனவுக்கு வழங்குமாறு 2018 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கிணங்க நடப்பு எட்டாவது பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் தோன்றியுள்ள நிலைமை சம்பந்தமாக ஆழமான ஆய்வின் பின்னர் எனது முடிவினை இறுதியாக அறிவிக்கக் கருதுகிறேன்.

மேலும், மேற்படி கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற விவாதத்திற்கான நேரத்தை ஒதுக்குதல் மற்றும் குழுக்களின் பிரதிநிதித்துவம் பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டதோடு அது சம்பந்தமாகவும் எனது முடிவினை அறிவிக்கக் கருதுகிறேன்.

2018 ஆகஸ்ட் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பல மணித்தியாலங்களாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி பற்றி சார்பாகவும் எதிராகவும் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கருத்துக்களையும், பாராளுமன்ற சனநாயகம் பற்றிய பரந்த அறிவு படைத்த ஏனைய புலமைசாலிகளின் கருத்துக்களையும், உலகின் ஏனைய பாராளுமன்ற மரபுகளையும், பொதுநலவாய அமைப்புக்களின் பாராளுமன்ற நாடுகளையும் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் செய்கின்ற நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளையும் மிகவும் ஆழமாக ஆராய்ந்து எனது கருத்துககளை இவ்விதம் வெளிப்படுத்துகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி பாராளுமன்ற வரலாறுபூராகவும் பேணிவரப்படுகின்ற மரபுகள் மற்றும் நடைமுறைகளுக்கு அமைவாக எமது அரசியலமைப்பினாலும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெருமைக்குரிய ஒரு பதவியாகும். மேலும் எமது நாட்டுக்கே தனித்துவமான வெஸ்ற்மினிஸ்டர் ஆட்சிமுறை மரபுகளுக்கு இணையாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி சட்டவாக்கத்துறைக்கே தனித்துவமானதும் பாராளுமன்ற முறையின் அத்தியாவசியமானதுமான பதவியெனவும் குறிப்பிடப்பட இயலும்.

எமது பாராளுமன்ற வரலாறு பற்றிக் கருத்திற்கொள்ளும்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக அரசாங்கத்துடன் தொடர்புபடாத அதிகபட்ச உறுப்பினர் எண்ணிக்கையைக்கொண்ட பொதுத்தேர்தலில் போட்டியிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது கூட்டமைப்பின் பாராளுமன்றத் தலைமையை வகிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சபைக்கு பிரகடனஞ் செய்யப்படுகின்ற மரபு மிகவும் தெளிவானதும் திட்டவட்டமானதுமென இதற்கு முந்திய சந்தர்ப்பங்களை ஆய்வுசெய்கையில் நன்றாக தெளிவாகின்றது.

எமது பாராளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக சபாநாயகரால் இனங்காணப்பட்டிருப்பது பொதுத் தேர்தலில் போட்டியிட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளில் ஆளும் தரப்பை சாராத பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டுள்ள கட்சி அல்லது கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் ஆவார்.

மேற்படி மரபானது பெரிய பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா போன்ற சனநாயக பாராளுமன்ற முறை செயற்பட்டு வருகின்ற நாடுகளிலும் அவ்வாறே செயற்படுத்தப்படுகின்றது. எமது அயல் நாடாகிய இந்தியாவிலும் ஆகக்குறைந்த ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளும் வரையறைக்கு கட்டுப்படுகின்ற போதிலும் எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவது ஆளும் தரப்பைச் சேராத ஏனைய கட்சிகளுக்கிடையில் பெரும்பான்மை உறுப்பினர்களைக்கொண்டுள்ள கட்சியின் தலைவராவார்.

அதற்கமைய, எதிர்க்கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கும் வழிமுறையானது எமது நாட்டின் மரபையும், பிரித்தானிய பாராளுமன்ற முறையை பின்பற்றுகின்ற ஏனைய நாடுகளின் மரபையும், கருத்திற்கொள்ளும் போது அது தொடர்பாக எத்தகைய கருத்து வேறுபாடும் இல்லையென என்னால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் குறிப்பிட முடியும்.

அடுத்த விடயமாவது மேற்படி மரபுகளுக்கமைய நிகழ்கால பாராளுமன்றத்தின் கட்சிப் பகிர்வு மற்றும் உள்ளடக்கத்திற்கமைய மேற்படி கோட்பாட்டினை நாம் ஏற்புடையதாக்கிக்கொள்வது எவ்வாறென ஆய்வுரீதியாக ஆராய்வதாகும்.

நிகழ்கால நிலைமை பற்றி சரியாகப் புரிந்துகொள்வதற்கு முன் , 2015 சனவரி 08 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்தலின் பின் ஏழாவது பாராளுமன்றத்தின் ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சி உருவாக்கப்பட்டிருந்த விதம் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும்.

கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மேற்படி பாராளுமன்றத்தின் பிரதமராகப் பதவிச் சத்தியம் செய்த பின் ஐக்கிய தேசியக் கட்சி முதன்மையாகக்கொண்ட உறுப்பினர்கள் குழுவொன்று அரசாங்க தரப்பினராக ஆளும் தரப்பினர் பக்கத்தில் அமர்ந்ததோடு அதுவரை அரசாங்க தரப்பினராக அமர்ந்திருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தரப்பினர் பக்கத்தில் அமர்ந்தனர்.

மேற்படி புதிய சூழ்நிலைக்கமைய எதிர்க்கட்சியின் தலைவராக யாரை இனங்காண்பது என்பதைத் தீர்மானிக்கையில், எதிர்க்கட்சித் தரப்பில் அமர்ந்துகொண்ட பெரும்பான்மை உறுப்பினர்களைக்கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நிமல் சிறிபால த சில்வா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொண்டுள்ள மரபுகளுக்கு அமைவாக, எனக்கு முன்னர் பதவி வகித்த சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

கௌரவ நிமல் சிறிபால த சில்வா அவர்களுக்கு எதிர்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்ட அக்காலகட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அமைச்சர்களாக சனாதிபதியின் முன்னால் பதவிச் சத்தியம் செய்துகொண்டதுடன் மரபுரீதியாக அவர்களுக்கும் ஆளும்கட்சியில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன.

அதுபோன்றே, இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்களிலும் எதிர்க்கட்சியின் சில உறுப்பினர்கள் பல்வேறு அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுக்கொண்டு அரச தரப்பில் அமர்ந்த சந்தர்ப்பங்களும், ஆளும் கட்சியின் சிலர் அமைச்சுப் பதவிகளிலிருந்து விலகி எதிர்க்கட்சியில் அமர்ந்த சந்தர்ப்பங்களும் இருந்திருக்கின்றதென்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 46 உறுப்புரையின் (4) மற்றும் (5) ஆம் பிரிவுகளின் பிரகாரம் தேசிய அரசாங்கமொன்றை நிறுவும் பொருட்டு 2015 செப்டெம்பர் 03 ஆம் திகதியன்று பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(1) (இ) ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தில் பெயர் குறித்து அதற்கு ஆதரவாக 143 உறுப்பினர்களும் எதிராக 16 உறுப்பினர்களும் தத்தமது வாக்குகளை அளித்து நிறைவேற்றிக்கொண்ட தீர்மானத்திற்கு அமைவாக தற்போது செயலுரு நிலையிலுள்ள தேசிய அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பங்காளிக் கட்சியாக இருப்பதால் தற்போதைய பாராளுமன்றத்தில் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ள விதம் பற்றி கருத்திற் கொள்ளுதல் அத்தியாவசியமானதொரு காரணியாக மாறியுள்ளது.

இதற்கேற்ப, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் அமைச்சுப் பதவிகளை வகித்து அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக ஏற்கனவே பணியாற்றுவதால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் உறுப்பினர்களை எதிர்க்கட்சியின் புறம்பானதொரு கட்சியாக ஏற்றுக்கொள்வதற்கு அரசியலமைப்பின் பிரகாரம், 2015 செப்டெம்பர் 03 ஆம் திகதியன்று பெரும்பான்மை வாக்குகளினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக எனக்கு ஆற்றல் இல்லை.

ஆகவே, கடந்த காலம் இடையறாமல் வழக்கத்திலிருந்து வரும் பாராளுமன்ற மரபுகளுக்கேற்ப அரசாங்கத்துடன் தொடர்பில்லாத, பாராளுமன்றத்தில் அதிகப்படியான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் தலைவர் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதானது தொன்று தொட்டு வழக்கத்தில் இருந்து வந்த மரபாகும்.

அதற்கேற்ப, தற்போதைய எட்டாவது பாராளுமன்றத்தில் அரசாங்கத்துடன் ஆட்சியில் இணையாமல் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள அதிகப்படியான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராகிய பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களைப் பாராளுமன்ற எதிர்க்கட்சியின் தலைவராக நான் ஏற்றுக்கொண்டுள்ளேன் என 2015 செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதி இச்சபைக்கு அறிவித்தேன் என குறிப்பிட விரும்புகின்றேன்.

விடயங்கள் இவ்வாறு அமைந்துள்ளமையினால், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பாக இச்சந்தர்ப்பத்தில் மாற்றமொன்றை மேற்கொள்வதற்கு அரசியலமைப்புரீதியாகவும், மரபுரீதியாகவும் இவ்வுயரிய சபையின் சபாநாயகர் என்ற வகையில் என்னால் முடியாதென்பதை எனது இறுதித் தீர்மானமாக இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

எவ்வாறாயினும், அரசியலமைப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ள தேசிய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாகச் செயற்பட்டு வருகின்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினைப் பிரதிநிதித்துவம் செய்து எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தில் வாதப்பிரதிவாதங்களில் பங்கேற்கும்போது நியாயமான நேரத்தினை ஒதுக்கிக்கொடுப்பதற்கும், தற்போது பாராளுமன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள சகல குழுக்களிலும் நியாயமான பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக்கொடுப்பதற்கும் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அப்பாராளுமன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பேன் என இத்தால் விசேடமாக வலியுறுத்துகின்றேன்.''

**2. பத்திரங்களைச் சமர்ப்பித்தல் :** (1) அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு வி டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் (ஒம்புட்ஸ்மன்) வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிர்வாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு வி டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சிச் சேவையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு வி டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 5(15) ஆம் பிரிவின் கீழ் சேர்பெறுமதி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 02 ஆம் திகதிய 2078/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதியை சமர்ப்பித்து மேற்படி ஒழுங்குவிதியை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு வி டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 05 ஆம் திகதிய 2074/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளைகளை சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் சேஜஸ் கம்பஸ் (பிறைவெட்) லிமிட்டெட் நிறுவனத்தைப் பட்டமளிக்கும் நிறுவகமாக அங்கீகரித்து உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 11 ஆம் திகதிய 2079/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 2016 ஆம் ஆண்டுக்கான கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளை மற்றும் அறிக்கையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு வி டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) கல்வி அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான கல்வி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு வி டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைககளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை இளைஞர், விளையாட்டுத்துறை, கலை மற்றும் மரபுரிமைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு வி டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1, 2, 3, 4 மற்றும் 5 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 24 (2 ) ஆம் இலக்கப் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு வி டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. பாராளுமன்ற அமர்வுகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2018 ஆகஸ்ட் 23 ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 10.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக

பிரேரணை சபைக்கு வி டப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 10.55 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

**5. பாடசாலை மாணவர் ஒழுக்காற்றுக் குழு விசாரணைகளை முறைசார்ந்த வகையில் மேற்கொள்வதற்கான வேலைத் திட்டமொன்றை தயாரித்து அமுலாக்குதல்:** கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன, கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க ஆமோதிக்க சமர்ப்பித்த பிரேரணை,— ஒருசில பாடசாலைகளில் மாணவர்களின் ஒழுக்காற்றுப் பிரச்சினைகளின்போது முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்படாமல் மாணவர்களை பாடசாலைகளிலிருந்து நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அதன்மூலமாக மேற்படி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சீரழிந்து பாரிய அநீதிக்கு இலக்காகின்றமையும், பெரும்பாலான மாணவர்கள் கடுமையாக உளரீதியான அழுத்தத்துக்கு உள்ளாகி மனநோயாளிகளாக மாறுகின்றமையும், ஒருசில மாணவர்கள் ஒட்டுமொத்த ஆசிரியர் சமுதாயத்தைப் போன்றே சமூகத்தையும் வெறுத்து சமூக விரோத குற்றவாளிகளாக மாறிய சந்தர்ப்பங்களையும் காணக்கூடியதாக உள்ளமையால், பாடசாலை மாணவர்களின் ஒழுக்கத்திற்கு முரணான செயல்களின்போது மிகவும் முறைசார்ந்த வகையிலும் பாரபட்சமற்றதாகவும் ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்றை தயாரித்து அமுலாக்க வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது. ( பா. 1/ ’18 )

(மு.ப. 11.20 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தாங்குவாராக” என மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 12.39 மணிக்கு கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பதுளை பொது வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையொன்றாக பயன்படுத்தி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் இணைந்த அரச மருத்துவ பீடமொன்றை ஆரம்பித்தல்:** கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ, கௌரவ நிஹால் கலப்பத்தி ஆமோதிக்க சமர்ப்பித்த பிரேரணை,— எமது நாட்டில் சிறந்த சுகாதார சேவையொன்றினைப் பேணிவரும்பொருட்டு அவசியமாகின்ற மருத்துவர்களின் எண்ணிக்கையில் தற்போது ஏறக்குறைய 50% மாத்திரமே இருப்பதோடு க.பொ.த. (உயர் தரம்) உயிரியல் பாடத்துறையில் அதியுயர் சித்திகளைப் பெற்றுக்கொள்கின்ற பெரும்பாலான மாணவர்களுக்கு அரசாங்க மருத்துவ பீடங்களில் பிரவேசிப்பதற்கான வாய்ப்புகள் அற்றுப்போயுள்ளதோடு அரசாங்கத்தின் கல்வி மற்றும் சுகாதார சேவைகளை பலப்படுத்துவதற்காக பதுளை பொது வைத்தியசாலையை போதனா வைத்தியசாலை ஒன்றாக பயன்படுத்தி ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பீடமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.
(பா. 2/ ’18)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தற்போது காணப்படுகின்ற பகிடிவதையை முற்றாக நிறுத்துவதற்கு இருப்பிலுள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்தல்**,—கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர, கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க ஆமோதிக்க சமர்ப்பித்த பிரேரணை,— பல்கலைக்கழகங்களில் அல்லது அதற்கு வெளியே புதிய மாணவர்களுக்கு எதிர்கொள்ள நேரிட்டுள்ள பகிடிவதையை முற்றாகத் தடுப்பதற்கு மற்றும் 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதைகளையும் ஏனைய இயல்பிலான கொடூரச் செயல்களையும் தடை செய்வதற்கான சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு பகிடிவதைகளில் ஈடுபடுகின்ற சகல தரப்புகள் தொடர்பிலும் சட்டம் அமுலாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகின்றது. (பா. 20/ ’18 )

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பகுதியைப் பாதுகாப்பதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்:** கௌரவ அசோக்க பிரியந்த, கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன ஆமோதிக்க சமர்ப்பித்த பிரேரணை,— புத்தளம் மாவட்டம் அதிரம்யமான கரையோரப் பகுதிக்கு உரிமைகோரிய போதிலும், கடலரிப்பு, கண்டல் தாவரங்கள் அழிவடைதல், அத்துமீறிய நிர்மாணிப்புகள் போன்ற காரணங்களினால் கரையோரப்பகுதி மாசடைந்துள்ளதால், புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பகுதியை பாதுகாப்பதற்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது. (பா. 23/ '18)

""கௌரவ மயில்வாகனம் திலகராஜா தலைமை தாங்குவாராக" என அரச தொழில் முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.40 மணிக்கு கௌரவ மயில்வாகனம் திலகராஜா தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒத்திவைப்பு (தோஹா ஸ்டெப்பர்ட் சிறீ லங்கா பாடசாலை மீது கட்டாருக்கான இலங்கைத் தூதரகத்தின் தலையீடு):** "இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 3.12 மணிக்கு பாராளுமன்றம் அதன் இன்றைய தீர்மானத்திற்கமைய, 2018 ஆகஸ்ட் 23 ஆம் திகதி மு.ப . 10.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.